வகுப்பு : 6-ம் வகுப்பு

பாடம் : தமிழ்

**இயல் - 6**

**கவிதைப்பேழை**

**நானிலம் படைத்தவன்**

**I. மனப்படப்பகுதி:**

பாயும்புயல் நம்ஊஞ்சல் - ஜலசா
பனிமூட்டம் உடல்போர்வை - ஜலசா
காயும்கதிர் சுடர்கூரை - ஜலசா
கட்டுமரம் வாழும்வீ டு- ஜலசா
மின்னல்வரி அரிச்சுவடி - ஜலசா
பிடிக்கும்மீன்கள் நம்பொருள்கள்- ஜலசா
முழுநிலவே கண்ணாடி- ஜலசா
மூச்சடக்கும்நீச்சல் யோகம்- ஜலசா
தொழும்தலைவன் பெருவானம்- ஜலசா
துணிவோடு தொழில்செய்வோம்- ஜலசா

**I. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி**

தமிழன் கற்களும் முட்களும் நிறைந்த பெரிய நிலப்பரப்பைத் திருத்திப் பண்படுத்தினான். தனது உடல் வலிமையால் வளத்தைப் பெருக்கினான். ஊர், நகரம், நாடு ஆகியவற்றை உருவாக்கி வாழும் பெருமையைப் பெற்றான். முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என நிலத்தை நால்வகைப்படுத்தினர்.

பழந்தமிழன் ஆழமான கடல்களைக் கடந்து பயணம் செய்தான். அச்சம் தரும் போர்கள்களிலும் எளிதாக வெற்றி கண்டான். பனிசூழ்ந்த இமயமலையில் தன் வெற்றிக் கொடியை நாட்டினான். ஆழ்கடலில் முழ்கி முத்தெடுத்தான். ஏலம், மிளகு ஆகியவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள்தோறும் அனுப்பி வணிகம் செய்தான். கப்பலில் உலகை வலம் வந்தான். அவன் எதற்கும் அஞ்சாதவன். ஆனால், சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சுபவன்.

**வினாக்கள்:**

1. **தமிழன் எதை பண்பபடுத்தினான்?**
2. **எதை உருவாகி வாழும் பெருமையைப் பெற்றான்?**
3. **நால்வகை நிலங்கள் யாவை?**
4. **தமிழன் எங்கு கொடியை நாட்டினான்?**
5. **எதை வணிகம் செய்தான் தமிழன்?**

**விடைகள்:**

1. தமிழன் கற்களும் முட்களும் நிறைந்திருந்த பெரிய நிலப்பரப்பைத் திருத்திப் பண்படுத்தினான்.
2. ஊர், நகரம், நாடு ஆகியவற்றை உருவாக்கி வாழும் பெருமையயைப் பெற்றான்.
3. முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என நிலத்தை நால்வகைப்படுத்தினார்கள்.
4. பனிசூழ்ந்த இமயமலையில் தன் வெற்றிக் கொடியை நாட்டினான்.
5. ஏலம், மிளகு ஆகியவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள்தோறும் அனுப்பி வணிகம் செய்தான்.

**I. குருவினா**

1. **நான்கு நிலங்கள் என்பன யாவை?**

   நான்கு நிலங்கள் என்பன
   - குறிஞ்சி
   - முல்லை
   - மருதம்
   - நெய்தல்

2. **தமிழன் எதற்கு அஞ்சினான்?**

   தமிழன் எதற்கும் அஞ்சாதவன். ஆனால், சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சுபவன்.

**3. தமிழன் எதற்காக கண்டகங்களை சுற்றிவந்தான்?**

ஏலம், மிளகு ஆகியவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள்தோறும் அனுப்பி வணிகம் செய்தான். அதற்காக கண்டங்களை சுற்றி வந்தான்.

**II. சிறுவினா:**

**1. தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான்?**

- பூமியின் பெரிய நிலப்பரப்புகள் காட்டுபெருவெளியாய்க் கற்களும் முள்களும் நிறைந்திருந்தன.
- தமிழர் தம் உடல் வலிமையால் அவற்றைப் பண்படுத்தினான்.
- பின்னர் ஊராகவும் நகரமாகவும் உருவாக்கினர். அதன்பின் நாடக உருவாக்கிப் பெருமை பெற்றான்.

**2. தமிழரின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?**

- தமிழன் நிலப்பகுதிகளின் தன்மையைக் கண்டறிந்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு வகை நிலங்களாகப் பிரித்தான்.
- கலமேறிக் கண்டங்கள் சுற்றி வணிகம் செய்தான்.

## கவிதைப்பேழை
## கடலோடு விளையாடு

**I. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:-**

மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்பவர்கள் மீனவர்கள். அவர்களுக்கு விண்மீன்களே விளக்குகள்: விரிந்த கடலே பள்ளிக்கூடம்; கடல் அலையே தோழன்; மேகமே குடை; வண்மையான மணலே படுத்துறங்கும் பஞ்சு மெத்தை; விண்ணின் இடி அவர்கள் காணும்கூத்து. சீறிவரும் புயலே விளையாடும் ஊஞ்சல். பனிமூட்டம்தான் உடலைச் சுற்றும் போர்வை. அனல் வீசும் கதிரவனின் ஒலிச்சுடர்தான் மேற்கூரை. கட்டுமரம்தான் அவர்கள் வாழும் வீடு மின்னல் கோடுகளே அடிப்படை பாடம். வலைவீசிப் பிடிக்கும் மீன்களே அவர்களது செல்வம். முழு நிலவுதான் கண்ணாடி. மூச்சடக்கிச் செய்யும் நீச்சலே அவர்கள் செய்யும் தவம். இவற்றிற்கு இடையை மீனவர்கள் மன உறுதியோடு தொழில் செய்கின்றனர்.

**வினாக்கள்:**

1. **மீனவர்களுக்கு எது விளக்காக எது, பள்ளிக்கூடமாக விளங்குகிறது?**
2. **மேகமும், மணலும் எதுவாக தோன்றுகிறது?**
3. **மீனர்வகளின் வீ டு எது**
4. **சீறிவரும் புயலே விளையாடும்**
5. **மீனவர்களின் செல்வம் எது?**

**விடைகள்**

1. மீனவர்களுக்கு வீ ண்மீன்களே விளக்குகள் விரிந்த கடலே பள்ளிக்கூடம்;
2. கடல் அலையே தோழன், வண்மையான மணலே படுத்துறங்கும் பஞ்சு மெத்தை
3. கட்டுமரம்தான் அவர்கள் வாழும் வீ டு
4. ஊஞ்சல்
5. வலைவீ சிப் பிடிக்கும் மீன்களே அவர்களது செல்வம்

**II. குறுவினா**

**1. அலையையும் மேகத்தையும் மீனவர்கள் என்னவாகக் கருதுகின்றனர்?**

- கடல் அலையே தோழன்;
- மேகமே குடை என மீனவர்கள் கருதுகின்றனர்.

**2. கடல் பாடலில் கண்ணாடியாகவும் தலைவனாகவும் குறிப்பிடுவன யாவை?**

- முழு நிலவுதான் கண்ணாடி,
- பெரு வானம்தான் தலைவன் என கடல் பாடலில் குறிப்பிடுகின்றன.

**3. மீனவர்கள் தமது வீ டாகவும் செல்வமாகவும் கருதுவன யாவை**

- கட்டுமரம்தான் அவர்கள் வாழும் வீ டு
- பிடிக்கும் மீன்கள் அவர்களின் செல்வங்கள் என மீனவர்கள் கருதுகின்றனர்.

## உரைநடை உலகம்
## வளரும் வணிகம்

**I. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:-**

நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து நமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வது பண்டமாற்று வணிகம் ஆகும். நெல்லைக் கொடுத்துத் அதற்குப் பதிலாக உப்பைப் பெற்றனர். ஆட்டின் பாலைக் கொடுத்துத் தானியத்தைப் பெற்றனர். இந்தச் செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இக்காலத்தில் கூட வீட்டிற்கே வந்து பழைய செய்தித்தாள்கள், பயனற்ற நெகிழிப் பொருள்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்கின்றனர். அதற்குப் பதிலாக வீட்டு பயன்படும் பொருள்களைத் தருகின்றனர்.

**வினாக்கள்:**

1. **பண்டமாற்று வணிகம் என்றால் என்ன?**
2. **உப்பை எதற்கு பதிலாகப் பெற்றனர்?**
3. **சங்க இலக்கியங்களில் காணப்படும் செய்தி எழுதுக?**
4. **வணிகர் மற்றும் நுகர்வோர் என்பவர் யார்?**
5. **பயனற்ற ______________ பொருள்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்கின்றனர்.**

**விடைகள்:**

1. நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து நமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வது பண்டமாற்று வணிகம் ஆகும்.
2. நெல்லைக் கொடுத்துத் அதற்குப் பதிலாக உப்பைப் பெற்றனர்.
3. ஆட்டின் பாலைக் கொடுத்துத் தானியத்தைப் பெற்றனர். இந்தச் செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.
4. பொருள்களை விற்பவரை வணிகர் என்பர்; வாங்குபவரை நுகர்வோர் என்பர்.
5. நெகிழி.

**II. பத்தியைச் சுருக்கி எழுதுக.**

வணிகத்தைத் தரைவழி வணிகம், நீர்வழி வணிகம் எனப் பிரிக்கலாம். தரைவழியாகப் பொருள்களைக் கொண்டு செல்ல எருது, கழுதை, குதிரை போன்ற விலங்குகளும் வண்டிகளும் பயன்படுத்தப்பட்டன. வணிகர்கள் வண்டிகளில் பொருள்களை ஏற்றி வெளியூருக்குச் செல்வார்கள். இக்குழுவை வணிகச்சாத்து என்பர். கடல்வழியாகக் கப்பல்கள் மூலம் பொருள்களை அனுப்புவதும் வரவழைப்பதும் நீர்வழி வணிகம் ஆகும். கப்பல்கள் வந்து நின்றுபோகு இடங்கள் துறைமுகங்கள் ஆகும். துறைமுக நகரங்கள் பட்டினம் என்றும் பக்கம் என்றும் குறிப்பிடப்பட்டன.

**விடைகள்:**

**தலைப்பு: தமிழர் வணிகம்**

வணிகத்தை இரண்டாக பிரிக்கலாம். தரைவழியாகப் பொருள்களைக் கொண்டு செல்ல விலங்குகளும் வண்டிகளும் பயன்படுத்தப்படுகிறது தரை வழி வணிகம் கடல்வழியாக பொருள்களை அனுப்புவதும் வரவழைப்பதும் நீர்வழி வணிகம். கப்பல் நிற்கும் துறைமுக நகரங்கள் பட்டினம், பக்கம் என்று குறிக்கப்பட்டன.

**III. குறுவினா:**

**1. வணிகம் என்றால் என்ன?**

- ஒரு பொருளைப் பிறரிடம் இருந்து வாங்குவதும் பிறருக்கு விற்பதும் வணிகம் ஆகும்.
- பொருள் விற்பவரை வணிகர் என்றும் பொருள் வாங்குபவரை நுகர்வோர் என்பர்.

**2. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டு தருக.**

- நெல்லைக் கொடுத்துத் அதற்குப் பதிலாக உப்பைப் பெற்றனர், ஆட்டின் பாலைக் கொடுத்துத் தானியத்தைப் பெற்றனர்.

**3. சிறுவணிகப் பொருட்கள் யாவை?**

- நம் அன்றாடத் தேவைகளான பால், கிரை, காய்கறிகள் போன்றவற்றை சிருவணிகப் பொருட்கள் ஆகும்.
- இவற்றை விற்பனை செய்பவர்கள் சிறு வணிகர்கள் ஆவர்.

**IV. சிறுவினா:**

**1. சிறுவணிகம், பெருவணிகம் - வேறுபடுத்துக**

**சிறுவணிகம்:**

- நம் அன்றாடத் தேவைகளான பால், கிரை, காய்கறிகள் போன்றவற்றை விற்பனை செய்பவர்கள் சிறு வணிகர்கள் ஆவர்.
- இவர்கள் சிறு முதலீட்டில் பொருட்களை வாங்கி வந்து வீ திகளில் வைத்து விற்பனை செய்வர்.
- சிறு வணிகர்கள் நுகர்வோரிடம் நேரடித்தொடர்பு கொள்பவர்கள்

**பெருவணிகம்:**

- பெருந்தொகையை முதலீடு செய்து பொருள்களை அதிக அளவில் திரட்டி வைத்துவிற்பனை செய்வது பெருவணிகம் ஆகும்.
- பெருவணிகர்களுக்கு நுகர்வோரிடம் நேரடித்தொடர்பு இருப்பது அரிது

**2. பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் எவை?**

- பழங்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து தேக்கு, மயில்தோகை,அரிசி, சந்தனம், இஞ்சி, மிளகு போன்றவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.
- சீனத்திலிருந்து கண்ணாடி, கற்பூரம், பட்டு போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன.

**விரிவானம் (துணைப்பாடம்)**

**உழைப்பே முலதனம்**

**உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுதுக.**

பூங்குளம் என்னும் ஊரில் அருளப்பர் என்ற வணிகர் வாழ்ந்து வந்தார். ஒரு முறை அவர் தம் பிள்ளைகளான வளவன், அமுதா எழிலன் ஆகியோரை அழைத்தார். வெளிநாட்டிற்குத் தாம் செல்ல இருப்பதாகக் கூறி, ஒவ்வொருவரிடமும் ஐம்பதாயிரம் ரூபாய் பணம் கொடுத்தார். தாம் மீண்டும் திருப்பி வரும்போது திருப்பித்தர வேண்டும் என்று கூறிச் சென்றார்.

மகிழ்ச்சியுடன் பணத்தைப் பெற்றுக்கொண்ட அருளப்பரின் பிள்ளைகள் ஆலோசனை செய்தனர்.

பின்னர், வளவன் உழவுத்தொழிலில் ஈடுபட முடிவு செய்தான். தந்தை கொடுத்த பணத்தில் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக் காய்கறித்தோட்டம் அமைத்தான். அவனது கடுமையான உழைப்பினால் காய்கறிகள் காய்த்துக் குலுங்கின. நகரத்திற்ககுக் கொண்டு போய் விற்று வந்தான்.

அமுதாவிற்கு ஆடுமாடுகள் வளர்ப்பதில் ஆர்வம் இருந்தது. அதனால், தந்தை கொடுத்த பணத்தைக்கொண்டு நாட்டுப்பசுக்கள் வாங்கிப் பராமரித்து வந்தாள். அதன் மூலம் கிடைத்த பால், தயிர், வெண்ணெய், நெய் போன்றவற்றை விற்றுப் பொருள் ஈட்டினாள்.

எழிலன், தந்தை கொடுத்த பணத்தைப் பத்திரமாகத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று முடிவு செய்தான். பணத்தைப் பெட்டியில் வைத்து, வீட்டின் பின்புறம் குழி தோண்டிப் புதைத்து வைத்தான்.

அருளப்பர் தம் பயணத்தை முடித்துக்கொண்டு வீட்டிற்க்கு வந்தார் தம் பிள்ளைகள் ஒவ்வொருவராக அழைத்துப் பணத்தைக் கேட்டார்.

வளவனும் அமுதாவும் தாங்கள் தொழில் செய்து பணத்தை இருமடங்காக்கியதாகக் கூறி, அப்பணத்தைத் தந்தையிடம் கொடுத்தனர். அவரும் மகிழ்ந்து அப்பணத்தை அவர்களிடமே திரும்ப அளித்துத் தொழில்களைச் செய்யுமாறு வாழ்த்தினார்.

இளையவனான எழிலனின் செயலால் ஏமாற்றம் அடைந்தார், அருளப்பர். “நீ பணத்ததையும் பயன்படுத்தவில்லை, காலத்தையும் வீணாக்கிவிட்டாய் இளையவனான நீ இன்னும் சிறிது காலம் என் உடனிருந்து தொழிலைக் கற்றுக்கொள்” என்று கூறினார்.

எழிலனும் ‘உழைப்பே மூலதனம்’ என்பதை உணர்ந்து, தந்தையிடம் தொழில் கற்று முன்னேற வேண்டும் என முடிவு செய்தான்.

# கற்கண்டு (இலக்கணம்)
## சுட்டு எழுத்துக்கள், வினா எழுத்துகள்

**I. குறுவினா:**

**வினாக்கள்**

**1. சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?**

- ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துக்களுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர்.
- அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். ஆனால் இன்று ‘ உ’ என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

**2. அகவினா, புறவினா - வேறுபாடு யாது?**

**அகவினா:**

- எது, யார், ஏன் இச்சொற்களில் உள்ள வினா எழுத்துக்களை நீக்கினால் பிற எழுத்துக்களுகுப் பொருள் இல்லை.
- இவ்வாறு வினா எழுத்துகள் சொல்லின் அகத்தே இருந்து வினாப் பொருளைத் தருவது அகவினா எனப்படும்.

**புறவினா:**

- அவனா? வருவானோ? இச்சொற்களில் உள்ள ஆ, ஓ ஆகிய வினா எழுத்துக்களை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.
- இவ்வாறு வினா எழுத்துகள் சொல்லின் புறத்தே வந்து வினாப் பொருளைத் தருவது புறவினா எனப்படும்.

**II. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:-**

மனிதர்களுக்கு தேவையான பொருள்களைக் கிடைக்கச் செய்வதே வணிகத்தின் நோக்கங்களுள் ஒன்று. ஓர் இடத்தில் உற்பத்தியாகும் பொருள்களைப் பல இடங்களுக்கு அனுப்புவதும் பல இடங்களில் கிடைக்கும் பொருள்களை ஓர் இடத்தில் கிடைக்கச் செய்வதும் வணிகம் ஆகும்.

கிடைக்கும் பொருள்களின் மதிப்பைக் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகமாகும். சான்றாகக் கல் என்பது பொருளன்று. ஆனால் அதனைச் செதுக்கிச் சிலையாக மாற்றலாம். உதிரும் கல்தூளைக் கோலமாவாக மாற்றலாம். இதனை மதிப்புக் கூட்டுதல் என்பர்.

**வினாக்கள்:**

1. **கிடைக்கும் பொருள்களின் ________க் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகம்.**
2. **சிலை செதுக்கப்படும்போது உதிரும் கல்தூளை ___________ மாற்றலாம்.**
3. **வணிகத்தின் நோக்கம் என்றால் என்ன?**
4. **மதிப்புக் கூட்டுதல் என்றால் என்ன?**
5. **இப்பத்திக்கு ஏற்ற தலைப்பை எழுதுக**

**விடைகள்:**

1. மதிப்பைக்
2. கோலமாவாக
3. மனிதர்களுக்கு தேவையான பொருள்களைக் கிடைக்கச் செய்வதே வணிகத்தின் நோக்கங்களுள் ஒன்று.
4. உதிரும் கல்தூளைக் கோலமாவாக மாற்றலாம். இதனை மதிப்புக் கூட்டுதல் என்பர்.
5. வணிகம்.

---

Ruby Public School
Next Generation School